19.06.2025 S.C.No.138 of 2017 P.W.52 – Anandhakumar

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் முதல் விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

(A1 to A5 present. A6 produced through warrant)

முதல் விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் மதியம் 02.43 P.M.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

30.06.2015ம் தேதி வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண்.158/2015, சட்டபிரிவு 176 கு.வி.மு.ச வழக்குக்கோப்பினை காவல் துணைக்கண்காணிப்பாளர் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை, வேலூர் அவர்களிடம் விசாரணைக்காக ஒப்படைக்கக்கோரி உத்தரவிட்டு காவல் ஆய்வாளர் வேப்பங்குப்பம் காவல் நிலையம் பொறுப்பு பள்ளிக்கொண்டா காவல் நிலையம் அவர்களுக்கு உத்தரவிட்டு அனுப்பப்பட்ட குறிப்பாணை C.No.J1(1)/030883/2015 அந்த குறிப்பாணையானது வேலூர் மாவட்ட குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை காவல் துணைக்காணிப்பாளர் அவர்களுக்கு சேர்த்து கொடுக்கப்பட்டுள்ளது. அந்த குறிப்பாணை அ.த.சா.ஆ.95.

சென்னை குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை கூடுதல் இயக்குநர் அவர்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015, சட்டப்பிரிவு 176 கு.வி.மு.ச. வழக்கினை விசாரிக்க என்னை புலன் விசாரணை அதிகாரியாக நியமித்தும் திரு.கருணாநிதி, காவல் ஆய்வாளர் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை, திருவண்ணாமலை

என்பவரை உதவி புலனாய்வு அதிகாரியாக நியமித்தும் R.C.No. C5/010718/2015, நாள் 30.06.2015 நாளிட்ட குறிப்பாணை ஆகும். அந்த குறிப்பாணை அ.த.சா.ஆ.96.

பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண்.158/2015, சட்டப்பிரிவு 176 கு.வி.மு.ச. வழக்கின் புலன் விசாரணைக்கு உதவியாக இருக்கும்பொருட்டு வருவாய் துறை அலுவலர் இருவரை நியமிக்கக்கோரி 04.07.2015ம் தேதி வழக்கின் விசாரணை அதிகாரியான நான் வேலூர் மாவட்ட வட்டாட்சியர் அவர்களுக்கு கொடுத்த வேண்டுகோள் விண்ணப்பம். அது அ.த.சா.ஆ.97.

மேற்படி நான் கொடுத்த வேண்டுகோளுக்கு வேலூர் மாவட்ட வட்டாட்சியர் அவர்கள் ந.க.பி1/6023/2015, நாள் 04.07.2015ம் தேதியிட்ட அவசர சுற்றறிக்கையில் வேலூர் வடக்கு உள்வட்ட வருவாய் ஆய்வாளர் திரு.கிருஷ்ணன் மற்றும் பென்னாத்தூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.விஜய் ஆகியோரை புலன் விசாரணைக்கு உதவியாக நியமித்து கொடுத்த அவசர சுற்றிக்கை அ.த.சா.ஆ.98.

05.08.2015ம் தேதி வழக்கில் புலன் விசாரணைக்கு உதவியாக இருக்க வேண்டி வருவாய்த்துறை ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரை நியமிக்கக்கோரி நான் வேலூர் வட்டாட்சியர் அவர்களுக்கு கொடுத்த வேண்டுகோள் விண்ணப்பம் அதன் பின்பக்கத்தில் வேலூர் தலைமையிட துணை வட்டாட்சியர் அவர்கள் இவ்வழக்கின் புலன் விசாரணைக்கு உதவியாக கீழ் அரசம்பட்டு கிராம நிர்வாக அலுவலர் திரு.சிவக்குமார் மற்றும் வேலூர் வடக்கு வருவாய் துறை ஆய்வாளர் திரு.தேவராஜ் ஆகியோர்களை நியமித்து கைப்பட எழுதிய அறிக்கை (இரண்டு பக்கங்கள்) அ.த.சா.ஆ.99.

அதன் பிறகு 20.01.2016ம் தேதி வேலூர் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை காவல் துணைக்கண்காணிப்பாளராக திரு. சந்திரசேகரன் என்பவர் பொறுப்பேற்றுக்கொண்டதால் பொறுப்பில் இருந்த நான் விடுவிக்கப்பட்டதால் இவ்வழக்குக்கோப்பினை மேல் விசாரணைக்காக அவரிடம் ஒப்படைத்தேன்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கே: காவல் துறையில் எத்தனை ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றுள்ளீர்கள்?

ப: 29 ஆண்டுகள்.

கே: ஒரு ஆய்வாளர் ஒரு நிலையத்தினுடைய பொறுப்பிலிருந்து ஆவணங்களின் மூலம் விடுவிக்கப்படாத நிலையில் அந்த ஆய்வாளரின் அலுவலக நிலைப்பாடு சட்டப்படி என்னவாக இருக்கும்?

ப: அவர் அந்த காவல் நிலையத்தின் ஆய்வாளராக பொறுப்பில் இருப்பார்.

கே: உங்களுடைய புலன் விசாரணையை 1-ம் எதிரியான மார்டின் பிரேம்ராஜ் அவரது பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆய்வாளர் என்ற பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டதாக (Relieve) ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா?

ப: இல்லை.

கே: வழக்கின் 1-ம் எதிரியான மார்டின் பிரேம்ராஜ் எந்தெந்த நிலையத்தினுடைய ஆய்வாளராக 15.06.2015 முதல் 19.06.2015 வரை பணியாற்றினார்?

ப: மார்டின் பிரேம்ராஜ் அவர்கள் பள்ளிக்கொண்டா வட்ட ஆய்வாளராக பள்ளிக்கொண்டா காவல் நிலையம் மற்றும் அணைக்கட்டு காவல் நிலையம் இரண்டிலும் வட்ட ஆய்வாளராக இருந்தார்.

கே: 1–ம் எதிரியான மார்டின் பிரேம்ராஜ் அவர்களின் நேரடி உயர் அதிகாரி யார்?

ப: ஆம்பூர் உட்கோட்ட காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.கணேசன் ஆவார்.

கே: உங்களுடைய புலன் விசாரணையில் 1–ம் எதிரியான மார்டின் பிரேம்ராஜ் 15.06.2015 முதல் வட்ட காவல் ஆய்வாளர் பொறுப்பில் இருந்து விடுப்பில் சென்றதாக ஏதாவது ஆவணங்கள் உள்ளனவா?

ப: எந்த ஆவணங்களும் இல்லை.

கே: 15.06.2015 முதல் 19.06.2015 வரை 1ம் எதிரியான மார்டின் பிரேம்ராஜ் ஆய்வாளர் பணியில்தான் இருந்தார் என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

ப: ஆம். ஒப்புக்கொள்கிறேன்.

கே: 1ம் எதிரியான மார்டின் பிரேம்ராஜ் 15.06.2015 முதல் 19.06.2015 வரை எங்கு பணியாற்றினார் யாருடன் பணியாற்றினார் என்பது குறித்து அவரது நேரடி உயர் அதிகாரியான டிஎஸ்பி கணேசனிடம் கேட்டு பதிவு செய்துள்ளீர்களா?

ப: டிஎஸ்பி கணேசனை விசாரித்து மேற்கண்ட விஷயங்களுக்கு வாக்குமூலம் எதையும் பதியவில்லை.

கே: உங்களது புலன் விசாரணையின்படி 15.06.2015 அன்று 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ் அவர்கள் எங்கு யாருடன் பணியாற்றினார்?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பள்ளிக்கொண்டா காவல் ஆளினர்களுடன் பணியாற்றினார்.

கே: 15.06.2015 அன்று ஷமீல் பாஷா (Deceased) என்பவரை யார் நிலையம் அழைத்து வந்தது ?

ப: 15.06.2015 அன்று ஷமீல் பாஷாவை யாரும் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் அழைத்துவரவில்லை.

கே: 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ்–ஐ போலீஸ் காவலுக்கு எடுத்து விசாரிப்பதற்காக 3வது நடுவர் நீதிமன்றம், வேலூர்–ல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளீர்களா?

ப: ஆம். தாக்கல் செய்துள்ளேன்.

கே: 05.08.2015 தங்களால் தாக்கல் செய்யப்பட்ட தங்களது பிரமாண வாக்குமூலத்தில் முதல் பக்கத்தில் கீழிருந்து மேல் நான்காவது வரியில் "15.06.2015 for an inquiry Thiru.Shameel Basha was allegedly illegally detained and brutally assaulted by Martin Preamraj, Inspector of Police, Pallikonda Police Station" என்ற வரிகள் உள்ளனவா ?

ப: உள்ளது.

கே: 15.06.2015 அன்று ஷமீல் பாஷா பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டார் என்பதை எந்த ஆவணத்தில்/பதிவேட்டில் பார்த்தீர்கள்?

ப: பார்த்தேன். எந்த ஆவணம்/பதிவேட்டிலும் பதிவுகள் இல்லை.

கே: போலீஸ் கஸ்டடிக்கு தாங்கள் பொய்யான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா?

ப: இல்லை.

கே: When non existing facts/averments are stated in your affidavit dated 05.08.2015, how that affidavit will be called legally?

ப: சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் அந்த பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட சங்கதிகள்தான். அதில் இல்லாத சங்கதிகளை நான் சொல்லவில்லை.

கே: தங்களால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் 15.06.2015 அன்று ஷமீல் பாஷாவை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டதாக பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: எந்த ஒரு வாக்குமூலத்திலும் எந்த சாட்சியும் 15.06.2015 அன்று ஷமீல் பாஷாவை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்ததாக சொல்லவில்லை.

கே: What is your date of recording of S.161 Cr.P.C. statement from Ali Akbar (P.W.1), Gouse Basha, Shajagan ?

ப: 02.07.2015.

கே: What is the date of your affidavit for taking A1 for Police Custody?

ப: 05.08.2015.

கே: Therefore, When non existing facts/averments are stated in your affidavit dated 05.08.2015, how that affidavit will be called legally?

ப: அதை எப்படி சொல்வது என்று எனக்கு தெரியவில்லை.

கே: When you have filed the section alteration memo before the Court?

ப: 03.08.2015.

கே: In para No.2 in section alteration memo dated 03.08.2015 "Thiru. S.Shameel Basha was alleglly and illegally detained and brutally assaulted

by Thiru.Martin Preamraj, Inspector of Police, Pallikonda Police Station and six other police personnell in between 15.06.2015 and 19.06.2015" என்று உள்ளதா?

ப: இருக்கிறது. 15.06.2015–ம் தேதிக்கும் 19.06.2015–ம் தேதிக்கும் இடைப்பட்ட காலத்தில் என்று பொருள்.

கே: ஆங்கிலத்தில் and என்ற சொல்லுக்கு தமிழில் என்ன பொருள்?

ப: And என்ற தனிப்பட்ட வார்த்தைக்கு மற்றும் என்பது பொருள்.

கே: Therefore you have filed a Section alteration memo with false averments by telling 15.06.2015 without any legally sustainable evidence, do you agree?

ப: ஒத்துக்கொள்வதை மறுக்கிறேன்.

கே: 15.06.2015 என்ற தேதிக்கு எவ்வித ஆவணமும் இல்லாத நிலையில் எவ்வித சாட்சியமும் இல்லாத நிலையில் தாங்கள் வேண்டுமென்றே 1ம் எதிரியை குற்றப்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு 15.06.2015 என்ற தேதியை குறிப்பிட்டு Section alteration memo தாக்கல் செய்திருக்கிறீர்கள். 15.06.2015 என்று சொல்வதற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா?

ப: இல்லை.

கே: What is the method of investigation adopted by you after you have received the CD file from Pallikonda Police Station?

ப: ஒரு காவல் நிலையத்தில் பதியப்பட்ட வழக்கை அந்த மாவட்டத்தில் உள்ள மற்ற காவல் நிலைய அதிகாரிகளோ அல்லது உயர் அதிகாரிகளோ புலன் விசாரணை செய்தால் அதே குற்ற எண்ணில் புலன் விசாரணை செய்யப்படும். சட்ட ஒழுங்கு காவல் நிலைய வழக்குகளை சிறப்பு புலனாய்வு குழுவான

சிபிசிஐடிக்கு மாற்றும்போது சிபிசிஐடி அலுவலகததில் அந்த வழக்கிற்கு புதிய குற்ற எண் கொடுக்கப்பட்டு அவர்களின் புலன் விசாரணை தொடரும்.

கே: தங்களால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் முதல் முதலில் யாரை விசாரணை செய்தீர்கள்?

ப: அலி அக்பர்.

கே: ஷமீல் பாஷா பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் யாரால் விசாரிக்கப்பட்டார் என்பதை விசாரித்தீர்களா?

ப: விசாரித்தேன்.

கே: யாரை விசாரித்தீர்கள், என்று விசாரித்தீர்கள்?

ப: சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ரவியை விசாரித்தேன். 07.07.2015 அன்று விசாரித்தேன்.

கே: 01.07.2015 லிருந்து 07.07.2015 வரை எஸ்எஸ்ஐ ரவியை விசாரிக்காமல் இருந்ததற்கான சிறப்பு காரணம் ஏதாவது உண்டா?

ப: காரணங்கள் ஏதும் இல்லை.

கே: எஸ்எஸ்ஐ ரவி பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் எந்த தேதியில் ஷமீல் பாஷா பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு வந்ததாக பதிவு செய்துள்ளார்?

ப: 16.06.2015 என்று வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

கே: 16.06.2015 அன்று எஸ்எஸ்ஐ ரவி அவர்களிடம் ஷமீல் பாஷா வந்ததாகவோ அவரை விசாரித்ததாகவோ எந்த ஆவணத்தில் பதிவு செய்து வைத்திருக்கிறார்?

ப: நிலைய பதிவேடுகளில் பதிவு எதுவும் இல்லை. அவரை விசாரித்த குற்ற எண் 140/2015 என்ற வழக்கு நாட்குறிப்பில் சாட்சியாக ஷமீல் பாஷாவை விசாரித்ததாக பதிவு

செய்யப்பட்டுள்ளது. அதில் எஸ்எஸ்ஐ ரவிதான் புலன் விசாரணை அதிகாரி.

கே: குற்ற எண் 140/2015 Woman missing வழக்கில் விசாரணை செய்தது குறித்து பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆவணங்களில் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்திருக்க வேண்டுமா வேண்டாமா ?

ப: சாட்சிகளின் விசாரணை குறித்து பொதுநாட்குறிப்பில் பதிய வேண்டும்.

கே: அவ்வாறு ஏதேனும் பதிவுகள் உள்ளதா?

ப: எந்த பதிவுகளும் பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொதுநாட்குறிப்பிலோ அல்லது பிற ஆவணங்களிலோ இல்லை.

கே: எஸ்எஸ்ஐ ரவியிடமிருந்து, 16.06.2015 முதல் ஷமீல் பாஷாவை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் வைத்திருந்ததாக ஏதேனும் ஆவணங்கள் தங்களால் பறிமுதல் செய்யப்பட்டதா?

ப: இல்லை.

கே: 16.06.2015 பள்ளிக்கொண்டா காவல் நிலையம் வந்த ஷமீல் பாஷா யாருடைய பொறுப்பில் இருந்தார் என்று விசாரித்து பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: எஸ்எஸ்ஐ ரவியிடம் ஷமீல் பாஷா 16.06.2015 பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பில் ஆய்வாளரின் உத்தரவின் பேரில் இருந்தார்.

கே: ஆய்வாளர் உத்தரவின் பேரில் ஷமீல் பாஷாவை நிலையத்தில் வைத்திருந்தேன் என்று எஸ்எஸ்ஐ ரவி கொடுத்த வாக்குமூலத்தில் உள்ளதா என்றால்?

ப: உள்ளது.

கே: அவ்வாறு ஒரு விசாரணைக்கு உட்படுத்தும் நபரை நிலையத்தில் வைத்திருக்கும்போது எந்த ஆவணத்தில் பதிவு செய்து வைத்திருக்க வேண்டும்?

ப: பொதுநாட்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும்.

கே: ஆய்வாளர் சொன்னபடி ஷமீல் பாஷாவை நிலையத்தில் வைத்திருந்தோம் என்பதற்கு பொதுநாட்குறிப்பில் அல்லது வேறு ஆவணங்களில் பதிவுகள் உள்ளதா?

ப: இல்லை.

கே: அதனால் எஸ்எஸ்ஐ ரவி சொன்னதாக தாங்களே அவரின் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் எழுதிக்கொண்டு 1ம் எதிரியை குற்றப்படுத்தியிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: சரியானது எது?

ப: பதிவு செய்திருக்க வேண்டும்.

கே: பதிவு செய்யாததின் மேல் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

ப: நான் புலன் விசாரணையை முழுமையாக மேற்கொள்ளவில்லை. முழுமையாக மேற்கொண்டு விசாரணையின் முடிவு தெரிந்த பிறகுதான் இதில் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும்.

கே: எஸ்எஸ்ஐ ரவியின் மீது நடவடிக்கைக்கு ஏன் பரிந்துரை செய்யவில்லை?

ப: புலன் விசாரணை முடியாத நிலையில் இருந்ததால் எந்த பரிந்துரையும் செய்யவில்லை.

கே: தங்களின் புலன் விசாரணை காலத்தில் எஸ்எஸ்ஐ ரவி என்னென்ன தவறுகள் செய்திருக்கிறார் என்பதற்கு உங்களது ஆவணங்களின் எங்காவது பதிவு செய்து வைத்துள்ளீர்களா?

ப: புலன் விசாரணை முடிவடையாத நிலையில் அவ்வாறு எதையும் பதியவில்லை.

கே: உங்களது Case Dairy–ல் எஸ்எஸ்ஐ ரவி என்னென்ன தவறுகள் செய்திருக்கிறார் என்பதை குறிப்பிட்டு ஏதேனும் பதிவு செய்துள்ளீர்களா?

ப: பதிவு செய்யவில்லை.

கே: 05.08.2015 தேதிய தங்களின் பிரமாண வாக்குமூலத்தில் ஷமீல் பாஷாவை 19.06.2015 மதியம் 01.00 மணிக்கு கௌஷ் பாஷவிடம் பைன்ட் ஓவர் செய்து அனுப்பியதாகவும் ஷமீல் பாஷாவை 19.06.2015 அன்று 16.30 மணிக்கு ஆம்பூர் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாகவும் குறிப்பிட்டிருக்கும் தாங்கள் 19.06.2015 மதியம் 01.00 மணி முதல் மாலை 16.30 வரை அதாவது மூன்றரை மணி நேரம் ஷமீல் பாஷா எவருடைய பொறுப்பில் இருந்தார் என்று குறிப்பிட்டு பிரமாண வாக்குமூலம் சமர்ப்பித்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: தங்களது 05.08.2015 பிரமாண வாக்குமூலத்தில் ஷமீல் பாஷாவை 19.06.2015 16.30 hours–க்கு ஆம்பூர் மருத்துவமனையில் யார் அழைத்துச்சென்று உள்நோயாளியாக சேர்த்தார்கள் என்று குறிப்பிட்டு கூறியிருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: 19.06.2015 16.30 hours–க்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டில் உள்ள காயங்களின் தகவல்கள் குறித்து, குறிப்பிட்டு எழுதியிருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: 05.08.2015 தேதியிட்ட தங்களின் பிரமாண வாக்குமூலத்தில் யார் எழுதி கொடுத்துவிட்டு ஷமீல் பாஷாவை அழைத்துச் சென்றார்கள் என்று குறிப்பிட்டு எழுதியிருக்கறிர்களா?

ப: பிரமாண வாக்குமூலத்தில் எழுதவில்லை.

கே: 19.06.2015 Bind over note–ல் இரண்டாவது பக்கத்தில் மேலிருந்து மூன்றாவது வரியில் "இன்று 19.06.2015–ம் தேதி விசாரணைக்கு வந்த நான்" ( எ.த.சா.ஆ.10) என்று உள்ளதா ?

ப: ஆஜர் முச்சிலிக்காவில் (Bind over) அந்த வரி உள்ளது.

கே: 19.06.2015 அன்று கொடுக்கப்பட்ட Bind over note–ல் கௌஷ் பாஷா அதாவது ஷமீல் பாஷாவின் மாமனார் "19.06.2015 ம் தேதி பகல் 13.00 மணிக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலிருந்து நல்ல முறையில் அழைத்துச்செல்கிறேன்" (எ.த.சா.ஆ.11) என்று உள்ளதா என்றால்?

ப: ஆஜர் முச்சிலிக்காவில் (Bind over note) மேற்சொன்ன வரிகள் உள்ளது.

கே: பொதுவாக நல்ல முறையில் அழைத்துச் செல்கிறேன் என்று எழுதிக்கொடுத்துவிட்டு அழைத்துச்சென்ற கௌஷ் பாஷாதான்

ஷமீல் பாஷாவினுடைய உடல் நலனுக்கு பொறுப்பாவார் என்றால்?

ப: சரிதான்.

1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 04.50 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.06.19 17:14:00 +0530